292

இலாஹி

பிஸ்மில்லாஹிற்றஹ்மானிற்றஹீம்

# ரத்தின ரஞ்சுகரசக் கோர்வை

இஃது

மருதநகரம் மரைமணம் புகழ்த[illegible]

தென்னாட்டில் தேன்மொழிக் கவியர்குலம் மை[illegible]

செந்தமிழ் வித்வப்புலவராகிய

பைரவி பாலமோகன ஸ்திசிபார்ட்டு

**M. R. அழுங்கனி அமீர்தாசன் அவர்களால்**

இயற்றப்பட்டது.

OFFICE OF THE REG[illegible]
11 JAN 1927
MADRAS

தென்காசி

ஸ்ரீராமாநுஜம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

[illegible]] 1926. [அணு 4.

9):417
N26
176449

இலாஹி

பிஸ்மில்லாஹிற்றஹ்மானிற்றஹீம்

# ரத்தின ரஞ்சுக ரசக்கோர்வை.

## காப்பு.

பூமறைப் பண்பூற்றுலகி லாட்சியுற்ற
    புலவரும் புகழ்ந்திட வளர்ந்தஜோதி
மாமறையிலங்கு மக்கநகர் வாழும்
    மன்னர் முகம்மதுயிறசூல் நபிமேலுரைத்த
காமலை நன்னெறிக் கீதமோங்க
    கவிந்தேன் பதம்மெழுப்பது மோதி
நாமறை ரத்தினரஞ்சுக ரசக்கோர்வை
    நூல்தனையெடுத்துரைக்க யிறையோனே நீதுணை

## விருத்தம்.

எழுகடலிருதயக் கமலகவனத்தில்
    யெடுத்தருளிய் முகம்மது நபிதனைத்துதித்து
பழுதறப் பூர்வச்சபாக் களின்மீது
    பண்ரத்தின ரஞ்சுகரசக் கோர்வைகீதமிசைத்து
தொழுதிட வுமதிருப் பாதமலரடி
    தரணியி லென்னாளும் பணிந்துபோற்றி
அழுதுருகும் அடிமைப்பிழை பொருத்து
    அரசேநீ கிருபைசெய்குவாய் ரப்பில்ஆலமீனே.

ஜாத்ததேசுமேரு என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் கேதாளக்கௌளி தாளம் ஏகம்.

1. பல்லவி.

வாருமசலாம் மலேக்கும்
வரமே அலேக்குமொஸ்சலாம் யாறசூல் யாநபி (வா)

அநுபல்லவி

வரமே யார்க்கும் வாசம்நபி நீதமே (வா)

சரணம்

ஆரபிக்குல மடுத்து அருமறைகள் வகுத்து
துரவி அப்த்துல்லா திருநாயகம
மாபிறுதித்தமுத்து மாதவம் யேககித்து
தாணியிலங்கும் ஹத்து தினமாகதம
அருளும் அகத்தின் சிபத்து (வா)

வாமே யார்க்கும் வாசம் நபிநீதமே (வா)

ஆமீனவீன்றசாபி அண்ணல் முகம்மதுநபி
மூமீன்குலங்கார்க்கும் நாயகம்
பூமித்தளிர்மதினை புகழ்வதும்மயனை
ஹேமீமுஸ்லீமு சல்லம் கூமாகதம
ஆமீன் யாறப்பில் ஆலமீன் (வா)

வாமே யார்க்கும் வாசம் நபிநீதமே (வா)

மீரேழச்சரப்பூவே மாங்கனிக்கதிறவே
ஆசிர் பாதமே நாயகம்
கோர்க்கமீர்தாசா கீதமேமூசா
சொர்க்க முகம்மத்தேசா ஜபமாகதம்
சேர்க்கும் பஹாவில் நேசா

நம்பினேனுன்னையே நடராஜ என்ற வர்ண மெட்டு.

இராகம் கல்யாணி தாளம் ரூபகம்.

2. பல்லவி

நித்யா ரஞ் சகமே (நித்)

அநுபல்லவி

நிதம் வேண்டி னேனுன் பாதமேகெதி (நித்)

சரணம்

சித்தம் பூண்ட செங்கோல் கோர்த்தி
சத்தியநிலை பட்டர் சற்மூர்த்தி
பக்திகொண்டுன் பதம்வாழ்த்தி
பையல் வேண்டி னேனுன் பாதமே (நித்)

வல்லோன் — வானறுஷில் சிறந்த
அல்ஹம்ந்தான — ஐந்தில் நிறைந்த
வெல்லுஞ்சங்கு — வுட்புகுந்த
வள்ளல்யா றசூல் முகபமது (நித்)

சிங்கண் நபி — ஜெகப்புவியில்
வங்கமாய் — வுதித்தவள்ளல்
சங்கைமேவும் — ஜெபரூத்தலத்தில்
சுந்தர மயில் ரூப மிலங்கும் (நித்)

புவியர் சுகம் — பொங்கு முகம்மது
நவியரஹிம் — நல்புத்ர ஈமீது
கவியாறையுங் — கீதமும் அகது
கிருபை கடாக்ஷம் பெருக அருள்வீர். (நித்)

ராம நாமமே தெய்வீக என்ற வர்ணமெட்டு

இராகம் கேதாளக்கௌளி தாளம் ஆதி.

பல்லவி

காதங் கம ழோங்கும்நபி காசிமுஸ்தபா
கதிரொளி பரவிய (காத)

அநுபல்லவி

பாதம் வணங்கி — பணியும் பாலன்
மாதவம் நாயகா — மரகத ரஞ்சுகக் (காத)

சரணம்

நீதம் பெருகிய — நத்திடும் பூஞ்சோலை
நாதரசம் மேவும் — நழினப்பதி மூலை
சாதமும் வுண்டு — சாற்றினேன் நூலை
மாதவம் நாயகா — மரகத ரஞ்சுகங் (காத)

அவ்வலகதில் — அடங்கியகோமான்
ஒவ்வகதியத்தில் — ஒளிவான சிமான்
செவ்வையாய்ச் — சீரருளிய பூமான்
திவ்விய நாயகா — திரு நகரற் புதங் (காத)

தேடுந் தரிகத்தின் — திருப்பதி திறந்து
நாடுங்கவிமா — நற்பொருளுணர்ந்து
வாடும் மனச்சூட்சம் — வடிபங்கெதழிந்து
சூடுவாய் மேதவா — சுருதியி லனுதினங் (காத)

சந்திரப் பிரகாசம் சதுர்மறை விடுத்து
சுந்தர மணிமேடை சுகத்தை அடுத்து
நந்தவனத்திரு நற்றவந் தொடுத்து
விந்தமே சொந்தமாய் வரமருள் பெறுவீர் (காத)

பேசாதியாகிய பருவக்கண் பூண்டு
பாசமுறையருள் புகழ்வதுங் கண்டு
ஆசிரியனமீது ஆனந்தங்கொண்டு
ஆசனம் வோங்கிய அகத்தொளி வீசிய (காத)

செம்புலிங்கமே என்ற வர்ணமெட்டு

இராகம் ஹிந்துஸ்தான் கவாய் தாளம் ஆதி

4. பல்லவி

காரணம் கரையில் மதியழைத்த பூரணம் நபி (கா)

அநுபல்லவி

சரணம் சரணம்நபி தருணங் கருணைத்துதி (கா)

சரணம்

சற்குருவாகிய சபூர்மனத்துதா
பொற்பாதமேகெதி புகழுருநீதா
தற்பரமிலங்கிய திருநபி நாதா
நற்சுகம் பூங்காவிவேகம் நுட்பகம் கருணைநபி (கா)

கவினுரு சேகரக் கமலப்பண்நீதி
புவியினிலநுதினம் புகழ்ந்துமே வோதி
நாவிலுதித்ததோர் நாயக ஜோதி
கூவினழை மருஷர்வேழை கருதும் யேழை கருணைநபி (கா)

எங்கும் நிறைந்திடும் யேகமெய்ப்புவனம
சங்கைத்தருத்தினில் சாருமேசோபனம்
தாங்குமுச்சுடர் திருப்பதிமௌனம்
வங்கம்நவ வாழும்பவ தாங்குஞ்சுவ கருணைநபி (கா)

சுருதி நற்கவிமா சுகம்பெருஞ் சமாது
அருளும் நன்னபி ஆசனம்மீது
குருபதமனுதினங் கல்பினிலோதி
சாகின்வாசம் தெளிவிஸ்வாசம் சொற்பிரகாசம் கருணைநபி (கா)

கொண்டல் நிகர்த்தமலர் என்ற வர்ணமெட்டு.
இராகம் கானடா தாளம் ஆதி

5. ஓரடித்துடர்ச்சி.

வங்கம் விழுங்கும் குணம் வங்கம் (வங்)

யெங்குமிவ்வேளை யேழையென்மீது
பங்கமகற்றிடும் பூங்காமுகம்மது (வங்)

திங்களின் மூச்சுழி தங்கும் வனந்தெளி
பொங்கிய நற்றெழி பூங்காமுகம்மது (வங்)

துங்க நற்பதம் தாங்குமே அற்புதம்
சங்கில் சுகிர்தம் சிங்கமே லிகிதம்
வாங்கு மரகதம் வோங்குமே அமுதம்
பாங்கிச் சர்விதம் பூங்காமுகம்மது (வங்)

சந்திரக்காந்தமெய் சிந்துடல் பாந்தமே
மந்திரக் கந்தமெய் முந்திறைச் சாந்தமே
அந்திர ஐக்துமெய் அந்தளிர் விந்தமே
தந்திரஞ் சிந்துமெய் தீந்தீமுகம்மது (வங்)

பின்மகுடம்

கற்றானை துழைத்த நபிநாதா —கயிற்சடையால்
வுற்ற புருக்கைக் கட்டிய தூதா —வள்ளவிணையே
போற்றும் பையல்கருள் மகுமூதா —பரமாயுலகில்

அருளிய சோபனம் அகம்பிலங்கிய அங்கம் —அகிலச்சிங்கம்
இருவிளி நடுநிலை இதழினி லமைந்த தங்கம்—இணையேயெங்கும்
பெருவெழி மருகலைபேதமகற்றியே பொங்கும்—புறவியோங்கும்
குருமொழி தீன்முல்லை கூறிட ஐவர் சுறங்கம் —கோரியவங்கம்

வகக்கடல் அகப்புலி வடிவின் கோலம்
முகச்சுடர் கற்பமே மாமதிப் பாலம்
சுகவுடல்ச் சுழிமுனை சுவைதரும் மூலம்

தினம் வணங்குந் திக்கீர் மனமிருந்த பஹ்கீர்
குணம் பிதா யிபுரூஹீம்
கனம் பொங்குந்திரு இனந் தங்குந்தரு
புன மெங்குந்தரு வினையகற்றுங்குரு—சாதம்

சிறுவன்கீதம் வுறுகும்வேதம்
வளரும்கீதம் வணங்குபொற்பாதம்

காக்கு மாதவம் கூர்ந்த தாயகம்
சாற்றும் அமீது சற்வாஞ்சுகம்
சேர்க்குஞ் சிறுவரை சீருயீடேற்றுவாய் (௰௧)

---

பஹாரியாலா தேக்கோ என்ற வர்ணமெட்டு

இராகம் ஹிந்துஸ்தான் கவாய் தாளம் ஆதி

6. பைத்து.

கபீப் காசீம் மாம் அகம்மத் நன் நபிமூஸ்தபா (க)
ஆபியத்தும் ஆனந்தம் அருளுந் திருத்தூதா

காபீரணுகாமல் காக்கும் நபிநாதா அகம்மத் நன்நபிமுஸ்தபா (க)
சுந்தரப்பிரகாச மிலங்கும் சூட்சப்பூங்காவில்
விந்தையாயுமது பாதந் தொழுவோமே அகம்மத்நன் நபிமுஸ்தபா

தொகையரு

பாசமெனு மெய்மறை மோகமேயுருகி பெருகுதே
மையல் மூப்பொருளாசனக் குருவே
தோசமறவே அடிமையான் செய்பவம் போக்கும்
திருநபி றசூலுல்லாவே

பாவிவேண்டும் மருதசேதம் புகழும் அமீர்தாசன்
கோவினைகள் தீர்க்கவந்த நபி நாதா அகம்மத் நன் நபிமுஸ்தபா (கபீ)

---

வருவாயே முருகேசனே என்ற வர்ணமெட்டு

இராகம் பைரவி தாளம் ரூபகம்

பல்லவி

ஆனந்தம் அருள்வாயே

அநுபல்லவி

ஞானமெய்க்கண் சூன் அலங்கரித்த மௌனமணி மேடையீது (ஆ)
வானில் மாமதியை வகியா அழைத்தநபி மகுமூதா (ஆ)

சரணம்

மோன மந்தரம் மூந்துந் திருதூதா
மானே மரகதமே மையல் கொண்டேன்நபி மகுமூதா (ஆ
மக்கம் மூமம தினம் வாழும் மன்னரிறசூல் நபியே (ஆ)
வர்க்கமே முழங்கும் வள்ளலாகிய நபிமகுமூதா (ஆ)

ஆர்க்கும்மறை அருளும் நபிநாதா
கார்க்கக் கலிதீர்க்கக்கவி கூவினேனநபிமகுமூதா (ஆ)
வழியை அறிந்த வொளிவு வீசிய நபி மகுமூதா (ஆ)
பொழியிலகு சதமாகிய பூரணம் நிறைந்தநபி மகுமூதா (ஆ)
யெழியோ னமீது யேற்றிடும்ரத்தினம்
கழினம் பரமேவிய நாயகம் நபிதிரு மகுமூதா (ஆ)

---

இப்படிப் புலம்புவதுமேன் என்ற வர்ணமெட்டு

இராகம் முகாரி தாளம் ஆதி

8. பல்லவி

மதினா நாயகா சரணம் மா

அநுபல்லவி

மாநிலம் புகழும் மக்கம் வாழும் நபியே திரு (மதி)

சரணம்

துதித்திடுஞ் செங்கோல்நீதி தூதர்கபீபுல்லாஜோதி
ஹாத்திமுலன்பியா ஹாதி கார்க்கும் மகு பூபே திரு (ம)

காரணம் விளைத்தசபியே காசிமுஸ்தபா நபியே
பூரணம் நிறைந்தபதியே பூஞ் சோலை யமைந்ததிரு (மதி)

ஆதிநாயகன் திரு அருள் தூதராயுதித்த
நீதியகம்மதுஅரு நிகழ்த்தும் மகத்வம் மணியேதிரு (ம

வான்மதியமைத்ததாமா வளர்மகுபியா பூமா
தேன்பொழித்ரசனமீது தளிருங்கீதந்துதித்தேன்திரு (ம)

மதநாகம போகசரச யென்ற வர்ணமெட்டு

இராகம் இந்துஸ்தான் பியாக்கு தாளம் ஏகம்

9. பல்லவி

பூர்வஜீவ கவிமாமணி பாநீதி கவிரச கனிமுக
பாலடுத்தோர் பயகாம்பர் முகம்மது அன்பியா நன்னபி (பூ)
அருமாமறையே அருளும் அகம்மதுயிறசூலுல்லா
திருநவக் கீதம் பறைந் திடத் துணையருள்சித (பூ)

சரணம்

அருமாமறையே அருளும அகம்மதுயிறசூலுல்லா
சுற்றலர் முற்றிடத்துதி சாற்றும் ஐந்தச்சரமோதி
நித்தம் வேண்டும் அழுங்கனி (பூ)

மக்கம் நாயகம் முகம்மது திருவடித்தூதர
மிக்காவின் சங்கீதம் பொங்கிட யென்னுளும்
மங்காத செங்கோலா (பூ)

கூறுங்கமலார் குருநவதிரு முகம்மது
அற்புதத் தருக்கனித்து வெற்றிரத்தினமணி
நற்றிய ரஞ்சுகக்கனி (பூ)

தொகையரு

மக்கநகர் மிக்கமனு ஜென்மவர்க்கம் ஒக்கஅரசாளு
முகம்மது நன்னபியே
யெக்காலமுந் தக்கபெரியோர் முன்னிற்க யேற்றிடுந்தீர்க்க
மறை ரஞ்சுகம் வாழ்க அருள்புரிவீர் சாபியே

சுந்தரமிவர் வுந்தினைமொழி மந்திரக்கவி
சிந்திடத்துதி தந்ததூலம் தங்கும் நாயகா
சார்ந்திடத் தகுந்தசாது செந்தமிழ் நாட்டியமீது
கோர்த்திட வளர்ந்தமாது கார்த்திடுமெடுத்துவோது (பூ)

---

தொனித்திடும் சங்கம் என்ற வர்ணமெட்டு

இராகம் பைரவி தாளம் ஆதி.

10. பல்லவி.

மாமலர் ரோஜா மகிழ்ந்திடும் ராஜா
க்ஷேம அணிநாம பணிதாம பமகரிக (மா)

அநுபல்லவி

தாமரை கற்பூதா தளிரும் நபிநாதா
ஜோதி மனநீதி தினமோதி பமகரிக (மா)

சரணம்

எட்டுத்திசை யிலங்கும் எடுத்தாடும் பொருள்தங்கும்
கண்டி பாலண்டி கனிவேண்டி பமகரிக (மா)

நாடும் அமீதுயேழை நினைத்திடுமிவ்வேளை
வாடும் மதிதேடும் துதிபாடும் பமகரிக (மா)

---

வானிலவோர்புகழ் வஞ்சிக்கொடி யென்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் கவாய் தாளம் ஆதி,

11. பல்லவித்துடர்ச்சி

முத்திய மெய்ஞானி முன்னோர் வேதம்
அத்தி அரண்முனி ஆசீர் பாதம்
எத்தி யெழில்க்கனி! யேற்றுங் கீதம்
பத்திப் பெருகநீ பகர்ந்த சாதம்

விருந்திடுவோர் விந்தமே
அருந்திட ஆனந்தமே
சாற்றிட நீர் சொந்தமே
சற்குருவின் பாந்தமே

காலமே கருணை காடி
ஆலம் மூகம்மதை தேடி
யேலமே பிரேகை பாடி
கோலவர்ணக்குணங் கூடி

கருநிறமாய் மேகமேகூடி
முறுகிய பெரு மாரி சொரிய

வாத்துடன் வந்தமாது
வடிவுடன் வாசிமீது
தருணம் நாவிலுதித்து
கருணை முத்துப் பதித்து

ஆரணரஞ்சுக ரசாதினம்
காரணமாய் கூவிய சூஸ்த்திரம்

பூமுடித்த காலமே
மாவடுத்த தூலமே
இருவிழிப் புருவத்தில்
குருமொழிக் கிரகத்தால்
வருவழிப் பருவத்தில்

திருத்தோழிப் பூங்காவனத்தில்
அருளையடுத்துக் கொச்சி
மலைப்பிரதேசம் புகுந்து
யேகாந்தத் தவம்புரிந்த

யேழை அமீது செப்புங் கீதம்
வாழ்த்தி யியற்றினேன் ரஞ்சுகச்சாதம் (முத்)

யேமாய்த்தபனு தார்த்தபபிக்ன என்ற வர்ணமெட்டு
இராகம் இந்துஸ்தான் பியாக் தாளம் ஏகம்

12. பல்லவி

ஏகவாககலா யேகிபநன்னபி யேகியநன்னபி பெங்கள்மூகம்மத்(ஏ)

அநுபல்லவி

ராகுசிங்கமே அமுர்தம் அமுர்தம் ராஜராஜகுரு முகம்மதுமே(ஏ

சரணம்

ஜெகமிலங்கிய ஜீவகாருண்யம் ராஜராஜகுரு முகம்மதுவே
அகமகிழாமினுள் அருந்தவபாலர் ராஜராஜகுரு முகம்மதுவே
ராகுசிங்கமே அமுர்தம் அமுர்தம் ராஜராஜகுரு முகம்மதுவே (ஏ)

சாத்வீகக்குணம்நிறைந்தஜோதி ராஜராஜகுரு முகம்மதுவே
எத்திசையும்புக ழோதியநீதி ராஜராஜகுரு முகம்மதுவே
ராகுசிங்கமே அமுர்தம் அமுர்தம் ராஜராஜகுரு முகம்மதுவே (ஏ)

பிர்மாசோபனந் தங்கும்ரத்தினம் ராஜராஜகுரு முகம்மதுவே
சற்மாமணப்பதியே சாற்றுமற்புதம் ராஜராஜகுரு முகம்மதுவே
ராகுசிங்கமே அமுர்தம் அமுர்தம் ராஜராஜகுரு முகம்மதுவே (ஏ)

ஆகலோக பூஞ்சோலையாஸ்பதம் ராஜராஜகுரு முகம்மதுவே
பாகமீதாசன் பறைந்திடுங்கீதம் ராஜராஜகுரு முகம்மதுவே
ராகுசிங்கமே அமுர்தம் அமுர்தம் ராஜராஜகுரு முகம்மதுவே (ஏ)

---

சிவ்லோக போகமுண்டு என்ற வர்ணமெட்டு

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஏகம்

13 முச்சீர்பதம்.

மங்கள முகம்மதே மையல்கொண்டேன்—திரு (மங்)

சங்கினில் ரசக்கோர்வை சிறந்திடு மேற்பார்வை
ஓங்கு முப்பாள் வங்கம் மாப்புகழ்
பொங்கிடு மெய்ப்பொருள் தங்கிடவேயருள் (மங்)

வர்க்கம் அரபிக்குலப் வளரனுக்கிரக மூலம்
நற்றியவர்க்கொரு வெற்றியமைத்திரு
முற்றுமனத்துரு மாற்றியசற்குரு (மங்)

கலையினிலெத்தருணம் கார்த்திடச் செஞ்சரணம்
பரிமணவாசம் பாரினில்வீசும்
பாம்பிரகாசம் பெருகியாஞ்சுகம் (மங்)

தொஹையரு.

திசை ஆயிரத்தெட்டுங் திருமயில்வடிவாய் ஜபரூத்தில்
நின்றாடிய நபியே
தசை தன்ளொளிவினிலருளைப் பாகூத்தில் தளிர்கண்டு
கூவிப்பகர்ந்த சபியே

விண்ணுலகில் வந்தபூவே வேதாம்பர் முகம்மதுவே
அன்பாய் அமீது பண்பாப்பறைந்து
நன்மை அகம்மது நாற்புது சிபத்து (நா)

---

வானாரே தும்பெரு என்ற வர்ணமெட்டு
இராகம் இந்துஸ்தான் பியாக் தாளம் ஏகம்

14. பல்லவி

நாடுதே நெஞ்சம் நாடுதே (நாடு)

அநுபல்லவி

நபி நாயகமே யிறசூல் நபி பாதமே (நாடு)

சரணம்

தேடும் யிரவுபகல் திருமறைத்தூதா
வாடுதே யென துள்ளம் வரமருள் தாதா
வீடுறவாய் நபி வருவீர்யிது தருணம் (நா

அருவுரு திருமறை அருளிய மூதா
ஆர்க்குங் காத்திமுல் அன்பியா நாதா
பெருகியகருவூர் பொற்பஅதினுதினம் (நா)

கற்பகம்மாதவக் காரணநன்னபி
கர்மவினையகற்றி காத்திடுஞ் சாபி
தர்மமே புண்யம் தருகியரஞ்சுகம் (நா)

தொஹையரு

திரும்மறை மணந்தயாபாத் தாபாத்தளிர்
மேதவப்பூவாசு முப்பொருளே
கருதிய கமலக்கண் நோக்கும் கபீபே
முகம்மதிறசூல் நபிதன்னருளே

அகதினிலாசை அடுத்துமே வருக
வகக்கட லருகினில் வணங்கினேன் வருக
ஜெகத்தினிலமீது சார்ந்துமே கெதிபெற (கா)

ராமபஜனைக்கோரியா என்ற வர்ணமெட்டு
இராகம் இந்துஸ்தான் கவாய் தாளம் ஆதி

15. ஓரடிப்பதம்

சீதமதிஞ நாயகா ஈஸ்பரத் தூதா.

மேகரவியர் புகழுமணியே மாமலராஜக்கனியே
காதங்கஸ்தூரி வீசும் நாதா ஈஸ்பரத் தூதா (சீ)

அவனி புவன சுவனம் அமரோர் புகழுமதினம்
பவனிக் கற்பூதநபி காதா ஈஸ்பரத் தூதா (சீ)

அகதினி லுகதாயுதித்த அவ்வல்பெகினில்வசித்த
மகத்துவம் மக்கநபி நாதா ஈஸ்பரத்தூதா (சீ)

கோலம் மயில் முறசே குருநபி முகம்மதரசே
ஆலக்கண் பாரும் நபி நாதா ஈஸ்பரத்தூதா (சீ)

தேசமும் மருதவூர் தாசனமீதுசபூர்
மாசங்கபியேற்றினேன் நாதா ஈஸ்பரத்தூதா (சீ)

யோகத்து மோஹெ யென்ற வர்ணமெட்டு
இராகம் இந்துஸ்தான் கவாய் தாளம் ஏகம்

16. பல்லவி

அண்ணல் முகம்மத் (அண்)

அநுபல்லவி

பென்றுந் திருச்சாணம் (அண்)

சரணம்

மன்ன ருகூனுல்லாவே மனுநீதி மறைப்பூவே
நன்நபி யெங்கும் தாயகமே
பொன்னகரில் வாழும். (அண்)

அழுங்கனி அமீது அலருமிவ்வேளை
யேழை யென்துயர் தீரும் நபியே
ஆழும் நபிக் கபீபே (அண்)

மல்லிகைமலர் வீசும்வாசமே என்றவர்ணமெட்டு

இராகம் செஞ்சுருட்டி தாளம் எகம்

17, பல்லவி

திருவேலிப்பதி தீன்முகம்மதுவே தினமென்னுவில்
அருளைப்பாடி துதித்தேன் சற்குருவே கவி

அநுபல்லவி

பெருகிடுதவ பருவதநவ
மருவியபிவ ரருகணிகுவ (தி)

சரணம்

புவனத்திலுள்ளோர் பகையைமீட்டினீர் போஜர்முகம்மது
பவமகற்ற பொருளைக்காட்டினீர் மறை
நவரூப ரதி ஜீவரசப்பதி
குவலயமதிக் குணமேநீகெதி. (தி)

பாதச்சோபனம ரத்னம் நீழ்த்தினேன் பூவில்முகம்மது
நீதம்பெருக நற்றிவாழ்த்தினேன் நற்
பூதலமணி போஜனக்கனி
வாதகற்றினி வணங்குமோரணி (தி)

வங்கத்தாவடம் தருகியதங்க வாசிமுகம்மது
அங்க மல்லிகை அருளுமேபொங்க விலைப்
பங்கப்போரணை பாங்கிமார்கணை
நீங்குவர்ப்பிணை வேங்கிடத்துணை (தி)

பூமணக்கடையநல்லூரில் புகழும்அமீது
மாமணங்கருதும் நற்சீரில் புதி
சோபனப் பரம் ஷேம அச்சரம்
நாமமே வரும் நேடப்பால்பெரும் (தி)

ஜோடா ஜோடா மோரி யென்ற வர்ணமெட்டு

இராகம் இந்துஸ்தான் கவாய் தாளம் ஏகம்

18. பல்லவி

ஆசை மீருதடி மானே (ஆ)

அநுபல்லவி

ஆசை வோசை அலருதாசே
பதிச் சுவாசப் பாடலன்னமே ஆசை
வங்க மெங்கு முதித்த அங்கமோங்கு மாங்குயிலே
சங்கை பொங்கும் நாயகமே செங்-கற்பம் மெய்த்-திடும் பூபே ()

சரணம்

பெருகிக் கருதிநிதம் பகர்ந்துன் பொற்பாதம்போற்றி
சுருதி நிலையனுங்கி சூஸ்திரப் பூங்காவில்சென்று
அற்புதத் தவம்புரிந்து மெய்ப்பதம் புகழ்ந்துவாடி (ஆ)

அலைகடல் மலைப்புவி ஆலம் அடங்கலும்மே
தலைமையாக வுதித்த தூதரிறசூல் நபியே
வுலைபோல மீறுருகி வணக்கம் மையல்பெருகி (ஆ)

பாலாபிசேகம் மழனிமலை என்ற வர்ணமெட்டு

இராகம் மோகனம் தாளம் ரூபகம்

19. பல்லவி

ஆதிகபீபே றசூல்நாதா அருள்புரிவீர் நபி மகுமூதா (ஆ)

அநுபல்லவி

நீதியாய் நற்பொருள் நிறைந்த நாயகம்
ஜோதிபேருந்திநேன் மூத்திபெறத் துணை (ஆ)

சரணம்

வினைதனை யகற்றிய வரமருள் புரிவீர்
அணைபதி நான்கிலும் அனுதினம் வருவீர்
வள்ளல் முகம்மது அம்பியா நன்னபி
வுள்ளங் குளிர்ந்து வுயர்ந்த சாபி (ஆ)

தொகையரு

எத்துயரகற்றிய யேழைக்கண் பாருமிறையோன் திருமகுரூபே
சித்திரக்காவினில் சத்துரு வகலத்தலிதாய் நின்றுதித்தகபீபே

துதிமறை வீசிய தரணியில் யோக்யம்
அதிமுறை அழுங்கனி அமீதின் வாக்யம்
அருளுமே அண்ண லிறசூலின் பாக்யம்
பெருகவே மெய்ப்பதம் போற்றினேன் சிலாக்யம் (ஆ)

இன்னும் பாராமுகமோ ராமா என்ற வர்ணமெட்டு

இராகம் இந்துஸ்தான் கவாய் தாளம் ஏகம்

## 20. ஓரடிப்பதம்.

உருகுதே யேழை யெந்தன் வுள்ளம் மேவாதை
மையல் பெருகானந்த வெள்ளம் (உரு)

அருகினிலொரு காட்க்ஷி ஆனந்த பொருளாட்க்ஷி
தருகிய முச்சூக்ஷி தகுதகினிலலரும்பட்க்ஷி
மருகிய கலைபொங்கி மீறி மேடை
பெருகிய கமலக்கண் பூறி (உரு)

ஆபம் புகுந்தாசம் ஆகாசக்கட்டி வாசம்
காயமே பிரகாசம் கிட்டிய மூலத்தேசம்
வாயங்கனி யறிந்த வீடு வாசி
தாய்க்கோலங் கொண்டுதிங்கக் கூடு (உரு)

வாசிப் புருவினோட்டம் வங்கநிலைப்பூந் தோட்டம்
நேசிப்பாய் ஜபருத்தின் நாதத்தலைவர் வாட்டம்
பேசிப்பழகும் மூப்பாள் பாட்டம் பாம்
பூசித்தெழுகுவதென் நாட்டம் (உரு)

சூஸ்திரம் மேகவண்டு சாதனைக் கற்பம்வுண்டு
சாஸ்திரம் அமுங்கனி சாற்றும் அமீதுவிண்டு
ஆஸ்த்திரைக் கருவூர் பூண்டு ஞான
வஸ்த்திரம் பெருகமு துண்டு (உரு)

தேக்கோ தேனேவாலா யென்ற வர்ணமெட்டு
இராகம் இந்துஸ்தான் பியாக்குதாளம் ஏகம்

21. பல்லவி

மையல்பெருகுதே நிதம் மன்னாிறசூல் நபியே (மை)

அநுபல்லவி

பையல்படும் நெடுந்துயர் பாவமேயகற்றி காரும் (மை)

சரணம்

செல்வக்கண் பாரும் சுகரசங் காரும்
அல்லும் பகல் அவனிதோறும்
கஸ்புடன் கவலை தீரும் (மை)

வல்லோனின் தூதா வணங்கினேன் வேதா
வெல்லும் நாதா வருமகு மூதா
சொல்ல வாதா சுகிரஞ்சூதா (மை)

தஞ்சமே நபி தழுவினேன் சாபி
கெஞ்சும் அமீர் ரஞ்சகமே
கொஞ்சும் ரசம் துஞ்சுவர்க்கம் (மை)

நலுங்கு தாலாட்டு வர்ணமெட்டு
இராகம் கேதாளக்கௌளி தாளம் ரூபகம்

22. ஓரடிப்பதம்

சித்திரா சோபனம் சுகம்
வாழ்த்தும் பிச்சுப்பூவனம் (சித்)

சுத்தம் தெண்ணீர் நிலச்சோலை ஜெக
பக்த்தர் கொண்டாடுங் காலை பணி
நித்தந் தீர்த்ததிற் கேற்ற
சித்தம் முக்கடல் பூமி (சித்)

நாட்டில் ஆலீம் ஷேகு வாக்கு நலங்
கிட்டினதே யென்பிதாக்கு குலமை
ஞட்டி அருளும் ரசம்
ஊட்டும் முக்கடல் பூமி (சித்)

யேரூர் நேர்வழி நாடும் யெழில்
பேரூர் புகுந்த வரைத்தேடும் புகழ்
நேருய் அதி ஜெயமே
காருய் முக்கடல் பூமி (சித்)

அந்திரத் தைவரின் தீர்த்தம் அணல்
வுந்தியில் அறிந்ததோர் பதார்த்தம் வுருகி
சிந்தும் அமிர்து செப்பும்
சொந்தம் முக்கடல் பூமி (சித்)

---

## 23. பைத்து

யாமதிஞ நபி யா றசூலுல்லா (மா)

நபியா றசூலுல்லா
நபியா றசூலுல்லா நாடுவோம்
நபி யுல்லா நபி மகுமூதா (மா)

முகமே தெரிசனம் மௌன சிம்மாசனம்
அசுதாயிலங்கிய நபி மகுமூதா (மா)

மக்கமீமார் செல்வம் மாதவம்நபி முசல்லம்
வர்க்கமே நபி மூலம் நபி மகுமூதா (மா)

அகம்மத் பிரகாசம் ஆரபியா தேசம்
யேகவாழும் நபிவாசம் நபி மகுமூதா (மா)

நாடும் அமீர் யேழை நாளை மகுஷர் வேளை
வாடுமென் துயர்தீரும் நபி மகுமூதா (மா)

---

மஜே தேத்தே கோய்க்காயா என்ற வர்ணமெட்டு
இராசம் பியாக் தாளம் ஏகம்

24, ஓரடிப்பதம்

நாதந்தன் கபுசேயே நாம்
அறிவதும் பர்லாமே (நா)

நாம் அறிவதும் பர்லாமே நாம் அறிவதும் பர்லாமே —நாம்
தெரிசித்த குணந்தாத்தாமே நாம் தினந்தினம் நாடுவோமே
நபியே குரு மகுமூதா (நா)

சாற்றும் ஐந்தச்சரப்பதியே சாற்றும் ஐந்தச்சரப்பதியே—சூழும்
ஈரேழு கருபின் சிபாத்தை இணைதெளிந்து தொழுகுவோமே
நபி யேகுரு மகுமூதா (நா)

யேழும் அமைந்தபஹாவே யேழும் அமைந்தபஹாவே—நாளும்
சுத்திடும் சியாத்தின்மீது நிலையேற்றி வணங்குவோமே
நபி யே குரு மகுமூதா (நா)

---

மருவே ஜெனித்த குழலால் மயக்கி என்ற வர்ணமெட்டு
இராகம் செஞ்சுருட்டி தாளம் திருவிடம்

25. நாலடிச்சீர்.

பாமே வருகும் புதுமைபெருகும்
வாமே அருள் மா மணியே வுன்
வுறவாலுருகும் வுனையே மருகும்
அறணே தருகும் ஆசைக்கனியே (பா)

தினமே அருளும் தருணமகிழும்
மனமே புகழும் மணியே மதி
மணமெய்க்குருளும் மகிமைப்பொருளும்
கனமாய்த் திரளும் கருணைக்கனியே (பா)

மண்ணிலாசை மறையின்பாஷா
விண்ணிமேலாசை மணியே விழிக்
கண்ணில்வருசைக் கணித்தகுருசை
கான்கூவில் தீட்சை கொண்ட கனியே (பா)

குலமே மதித்து குணமாய்ப் பதித்து
மூலந்தொடுத்த மணியே மஹானில்
தலமே அடுத்து தவமேபுரிந்து
ஆலமீது விடுத்த அமுதூக்கனியே (பா)

---

குயிலேயெந்தன் மீதிலுனக்கென்ன கோபம் என்ற வர்ணமெட்டு
இராகம் கவாய் தாளம் சாப்பு

26, பல்லவி,

நாடுதே நெஞ்சமிவ்வேளை நழினப்பாதம் (நா)

அநுபல்லவி

வாடுதே சரணம் வருவீரித்தருணம் (நா)

சரணம்

அந்திரக் காங்கை ஆங்கார வேங்கை
வந்தவழிக் கங்கை வாசிப்பள்ளிச் சங்கை (நா)

காவலவள் வீடு கருங்கருவல்க்காடு
யேவலறப் பாடு எண்சாண் தூலக்கூடு (நா)

மூலத்திருமேடை முளங்கும் பாகூத்துவோடை
உலாவுங் குயில்ச்சாடை வுள்ளக்கருங்காடை (நா)

மங்காத வண்டு மனத்தோழிப் பெண்டு
பூங்கமீது விண்டு பாங்கையைக் கண்டு (நா)

---

திருமாமலரடி தனையருளும் என்ற வர்ணமெட்டு.
இராகம் நாராயணகௌளை தாளம் ஆதி

27 பல்லவி.

வாலக்குரு வுருபருள் திருமலர் வணங்குவமே தே மோட்சம்
வுலாவுந் தோழி (வா)

அநுபல்லவி

மூலம் முப்பொருளிறகுலே
கோலம் மனக்குயிலே—கருவினுரு (வா)

சரணம்

தலமே ரக சியவியஜெயாகு தவம்பெரும் புகழுருவே
மஹாரம்மேலே மதியருளாலே
ககனப்பூரணங் குயிலே —கருவினுரு (வா)

பூர்வவான் னேழுலகுதிறை பிரம்மசோபனம் நபிநாதா
சீர்தேடு சூட்சுமியம் நாடு
நோாயமீதுபீடு —நிருபம்மூடு (வா)

---

கழுகுமலைக்கு நாம்நேருய்! யென்ற வர்ணமெட்டு
இராகம் பைரவி தாளம் ரூபகம்

28. பல்லவி

ஜெயஜெயநன் நாடுதென்காசி ஆசிரியன்
ரத்தின ரஞ்சுக ரசமே வாசி (ஜெய)

அநுபல்லவி

நயந்து யிலங்கு மற்புத நலம்பெறச் சுகிர்த (ஜெய)

உயர்ந்த சங்கீதக்கீத வுருதிதங்குஞ் சுகிர்த (ஜெய)

வெற்றிதரும் வித்வமுறை கற்றவரை நித்தம் வுறை (ஜெய)

சரணம்

நியாயமென் குலந்தென் னாட்டில் மைனாட்டி
தாயகமாய்ப்பாடித் திருச்செந்தமிழ் மீட்டி
மாயவினையகற்றி மதியாலமுதை யூட்டி
நேயக்கமல சூட்சுமிய நினைவால் வாசியைப்பூட்டி

ஆழும் அருள்க் கவிராஜன்
அழுங்கனி அமிர்துதாசன்
தழுவிய தங்கு முல்லாசன்
தொழுதிட தகுஞ் ஜெகவாசன் (ஜெய)

## விருத்தம்.

திருமன முருகுஞ்செல்வம் நீனிஸ்லாம் தளிர்ப்புற்றோங்க
ஒருமனதாய்ப் பகர்ந்தமூலம் ஓானுப்பிசமிலா யாதியின் கிருபையால்
அருமனம் நிறைந்த கல்பில் அரு பமாய் வுதித்தபுஷ்பம்
வருமன முறைமுறையாய் நின்றவள்ளல் வளரும்பக்தாத்து முகியித்தீ
[ணுண்டகையே.

செந்தூர் நாயகமே என்ற வர்ணமெட்டு
இராகம் பிலகிரி தாளம் ரூபகம்

29. பல்லவி

கிருபை செய்குவாய் முகியித்தீனே (கி)

அநுப்பல்லவி

குருவே நீன்குலந் தலீர் ராஜக்குண கருணை முகியித்தீன் (கி)

சரணம்

வருவினை யகற்றும் வள்ளல் முகியித்தீன்
கருதிய வுன்பாதம் கரையில் பணிந்தேன்யான்
குருவே நீன்குலந் தலீர் ராஜகுண கருணை முகியித்தீன் (கி)

புதுநகரத் தலீல் பெருக அருள்பெற்ற
சதுர்வேதம் நிறைந்த செய்குகுலம்போற்ற
மதுரம் நீன்குலந் தலீர் ராஜகுண கருணை முகியித்தீன் (கி)

வாழும் பக்தாத்தில் வாசம் பொருந்திய
புகழு முகியித்தீன் பாதக்கண் காட்சியே
தொழுகுந் தீன்குலக் தலீர் ராஜகுண கருணை முகியித்தீன் (கி)

வளரும் யிபுருஹீம் வழிமேவுங் கருமும்
வழுத்தும் அமீர்தாச சம்மானப்த்துல்லேஷகும்
வாழுந் தீன்குலந் தலீர் ராஜகுண கருணை முகியித்தீன் (கி)

ஜோர் ஜோர் என்ற வர்ணமெட்டு
இராகம் இந்துஸ்தான் காபி தாளம் சாப்பு

30. ஈரடிப்பதம்.

பேர்பெருக அஜீமீர்பதியில் புண்யர் முகியித்தீன் வாழ்க (பே)
வூர்பக்தாத்து தேச மிலங்கும்
சீர்பெருகச் செந்தமிழோங்கும்
நேர்வழி தங்கிய நாதர் முகியித்தீன் (பே)

வுருகி யிலாஹி வேதம் நிறைந்த
புருக்கான் நீத யில்மை சார்ந்த
பாரில்நற் கலிமா பகரு முகியித்தீன் (பே)

வங்கந் துலங்கும் வல்லோன் திருபணி
சங்கை மேவிய சாற்றும் பாலணி
மங்காதொரு போதும் ம்கிபர் முகியித்தீன் (பே)

பழனிமலையாண்டி என்ற வர்ணமெட்டு
இராகம் இந்துஸ்தான் பியாக் தாளம் ஏகம்

31. பல்லவி
அருள்வீர் முகியித்தீன் ஆசீர் பாத மேகெதி (அ)
அநுபல்லவி
ஆசீர் பாதம் ஆசீர் பாத மேகெதி (அ)

சரணம்

ஆரைந்து மறிந்து அகத்தினில் தெழிந்து
நேறுமெனை மதித்து நிலத்தில் கிருபைக்
கனி குரு திருப்பாதம் (அ)

நன்னகர் வாசி நாடுந் தென்காசி
அன்னத்தலீல்கள் வீசி ஆசனம்விளைத்த
கனி குரு திருப்பாதம் (அ)

புதுநகர்ப்பூமி பால் பெரும் நேமி
மதுரம் சிந்தும் புலவர்ஷேமி மாமணம்நிறைந்த
கனி குரு திருப்பாதம் (அ)

தீன்காதர்பாட்க்ஷா தெளிந்தபூ ரோஜா
கான்பிச்சைக் கொதுவுராஜா கனந்தங்கிய
கனி குரு திருப்பாதம் (அ)

தொகையறு.

கலையென்றடைக்கலப் புவிமீது குதூகுலங் கொண்டமாய்கை
வலைதனையகற்றி வசையிலாதிருந்து விரதங்களுண்ட சாய்கை
பாரினி லுன்பாதம் பகருவோர்ப் பிடிசாதம்
கூறும்அமீதுதாசன் கீதம் குலம்பெருகுங்
கனி குரு திருப்பாதம் (அ)

கண்டால் கவிகள் தீருமனமே என்ற வர்ணமெட்டு
இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் எகம்.

32. பல்லவி

மனமே மறகாதே யென்னாளும் முகியித்தீனே (ம)

அநுபல்லவி

கோண மிலங்கிய குருமுகியித்தீன்
இனங்கள்பிரியாமல் இருபாதம் தொழுதேன்
அன்னமொழிகள்போ லுன் அருளை யுங்கெளிந்தேன்
மின்னும்பிர வல்யங்கொண்ட மேலோன்முகியித்தீனே (ம)

### சரணம்

எங்குந் துலங்கும் ஆலீம் பாசம்—யேகவேயருள்
பொங்குந்தலீல் பதம்வி லாசம்—புருஹான்நீதம்
தங்குந்திருக்கலிமாசு வாசம்—தலத்தில்நாமம்
ஓங்கு முகியித்தீன் பிர காசம்—வோசைபக்ந்தாத்தில்

பின்மகுடம்

மூந்தத்தவத்திரு வந்துயுதித்தொரு பாலர்—மாகதமே
செந்தமிழிப்புவி சிந்துவர்கற்கவிச் சீலர்—ஜெகமிலங்கும்
வேந்தலர் தற்சுக விந்தமைமுற்றனு கூலர்—ம்வளிப் பிரதேசம்
கந்தம் அறபி ஹிந்தியும்புகழ்ந்திடும் மூலர்—குருமுன்னிற்க

வண்ணர் மொழிக்கவி—யின்னிலப்புவி—விண்ரவி நிதங்
காதம்—கமுகெனவே
அண்ணலற்புதம்—நன்னிலச் சதம்—மின்னு புருஹான்
நீதம்—ஆவலுடன்
பண்ணர் குருத்துணே—பொன்னி லக்கணே—கன்னுமதிக்கிணே
பேதம்—பாருலகில்
வெண்ணிலக்கெதி—நின்னிலத் துதி—வுன்னு மகம்மதிர்
வேதம்—வாழ்க வாழ்கவே

ஆர்க்கும் வுபதியாய் அணுகிய கோவே
சேர்க்கும் ஜெயக்கீத சங்கிர்தபாவே
கோர்க்கும் அமீதைப்பாது கார்த்ததோர் பூவே
வர்ககமே பக்த்தாத்து வாழுமுகியித்தீனே (மன்)

காதல்கொண்டிடக் கதிர்முகம் வாடினேன் என்று வர்ணமெட்டு
இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

33, ### ஓரடிப்பதம்

நித்திரையகற்றி நீதியையெழுதினேன்—வுண்ணுமே
போனத்தன்மையே மிக யினிமையே றஹீம்
புத்திரர் அழுங்கனி பக்திக்கொண்டிசைத்தகதும்
பண்மையே பசரும் நன்மையே (நித்)

1764649

வித்வக்களை முறுகி வனத்தின்மீதுமனம் வாடினேன்
குருநாடினேன் கீதம் பாடினேன் வேதம்
நத்திப்புகழ்கவிதை நித்த முகியித்தினை வேண்டினேன்
வரகாய் அண்டினேன் (நித்)

தஞ்சமென்றுன் பாதம் தழுவியபேர்க்கனு கூலமே
துணைமூலமே மனக்கோலமே தினம்
துஞ்சுமே ரத்தினம் தஞ்சமெந்தி போற்றும் தூலமே
பதி ஆலமே (நித்)

அற்புத அமீது தர்ப்பாமாய் பறைய அஞ்சுமா
பாடல் கொஞ்சமா தங்கம் பஞ்சமா ஆசை
வெருப்பினிரும் பரண் வற்புருத்தும் அறண் தஞ்சமே
அலரும் கெஞ்சமே (நித்)

---

செஞ்சரணமே சிறியேன் முகம்பாரும் என்ற வர்ணமெட்டு

இராகம் அறிகாம்போதி தாளம் ரூபகம்

34. பல்லவி

அமீர்த ஜீஷறு அருளானந்தசேக்று பாலன் (அ)

அநுபல்லவி

தமியோனிபுறுகீம்பாலா அனுக்கனுகூலா
பூமி தர்பச நேமி அற்புத ஹாமிவிஞைதானே—பாலன் (அ)

சரணம்

தர்மம் மாப்பிரகாச மிலங்கிய—தருணம்
பிரதயபக்த்தாத் முகியித்தின்பொற்—சரணம்
நற்குலங்கள் கோத்திரம நலம்பெற்று வாழ்க
வுற்றயென்மனம் பற்றியேதினம் நற்றிக்கீதம்பறைந்தேன் பாலன் (அ)

சங்குசேஷத்திரச் சங்கிர்தாச—விகுணு
வங்க கித்யம் வோங்கியலகுச்—சைனு
அங்கமே அமீ துதாசன் அறையுங்கீதமே
சிங்கமேவுது தங்குமான் குதுப் சேகுசிஷியாமீத்—பாலன் (அ)

### விருத்தம்

காவுலகு மஞ்சிக்கவி கதிர்கள்சூழும் ஹாமிலுதுமான்
லெப்பைசெய்கு மாபிலுதித்த புத்ரர்
மாவுலகு கடையநல்லூரினில்வாழும் மகிபர் செய்குது
மாஹெலியின் மீதிற்
ஆவுலகு பெருகும்ரத்தின மென்னும் அலைமேவும்
ரஞ்சுகரசக கோர்வைதனை வழுத்த
பூவுலகு பொருந்துமொளிவு போற்கார்க்கும்
பக்தாரத்து முகியித்தீனுண்டவர் துதி,

பாண்டியன் ஈன்ற மீனுச்சி என்ற வர்ணமெட்டு

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி

35. **ஈரடிப்பதம்**

சோபனம் பொங்கு மஹானில் வாழும் செய்குதுமானே (சோ)

பாவனம் வோங்குங்கருனே பொற்பாதம் புகழ்வதேநீதம் (சோ)

புவனத்திலேல்ழைக்கண் பாருங்குருசே பாடினேன் அரசே
மோனமே அச்சரத்திருக்கிருபை மெய்ப்பதமருள்வீர் (சோ)

தொகையறு

மாவளர்தங்கும் செய்குதுமாஹெலியின் மதி பரம்பரையா
யரசுபுரிந்த செய்குகுலத்தி லுதித்தபூவே
காவளமெங்கும் கஸ்தூரிவீசிய கடையநல்லூரில் காரணம்
விளைவித்த கற்பகக் கமழ்மாதவக் கோவே

தாவளந் துலங்குஞ் செங்கோலின் நீதமே கருவெடுத்தோதும்
நாவளமா முழங்கிடவே அமீது நற்றினேன்கீதம் (சோ)

### காப்பு

சீர்மேவும் சென்னைவாழும் ஜெம்மல் முகியித்தீனைப்போற்றி
கூர்மேவும் வள்ளலல்லி காஜுத்தி மீருசாகிபு தம்மைப்போற்றி
கார்மேவும் பதிவாழும் காதரொலியே பொற்பாதம் போற்றி
கோர்மேவுங் கவிமாரசக் கவிதனையியற்றிட ஹக்கனேநீகாப்பு.

## விருத்தம்

வரும்வினை தவிர்த்துக்காத்து வருசையாப் புகழைநாட்டும்
சருகிடுங் கசடர்தன்னை ஜெகத்தினில் விலங்கைப்பூட்டும்
இருகரச் செல்வம் யேந்தி இசைத்திடுங்கனிக் கமூர்தையூட்டும்
கருமுகில் நெறிகள் பொங்கும் காமில்முகியித்தீனை துணை.

யென்னையறியாமல் தாலியென்கழுத்தில் என்ற வர்ணமெட்டு

இராகம் இந்துஸ்தான் பியாக் தாளம் சாப்பு

36. பல்லவி

கலி மாப்பொரு ளறிகுவாய் மனமே கதி
மோட்க்ஷந்தருந் தினமே (க)

அநுபல்லவி

வலியவனுதி வருசை நபிக்கு
சலியாமல்வகுத்த அமானீதம்வோதி சுகம்பெருவாய்மனமே (க)

சரணம்

லாயிலா ஹா யில்லல்லா கூ
முகம்ம துற் றசூல்லா கூ
லாயிலா ஹாயென்னும் ஐந்தெழுத்துஞ்சுத்த
லாஹீர்பனு வாகுமே அறிவித்த
இல்லல்லாகூ வெனும் யேழெழுத்தைப் பஹாவென்றறிவாய் மனமே (க)

இல்லல்லா கூவென்ற
இணையற்ற இறையோனை
குல்குடன் வணங்கு வாயே அனுதினம்
கல்புமுழங்கிடுமெய்ப் பொருளே அவன்
அல்லாது வேறொன்றுமில்லையென்றே தினம் அறிந்திடுவாய்மனமே ()

இல்லல்லா கூவென்ற
இணையற்ற இறையோனை
எல்லை அறிந்துமே யேகியனுவழி
தில்லைப்பொருள் திக்கிருடன்வணங்க அவன்
அல்லாது வேறொன்றுமில்லையென்றே தினம் அறிந்திடுவாய்மனமே (க)

இருயிணை அகற்றும்
இல்லா வென்றெழுத்தை

இருத்தி மறைவாக்கி இசைத்தயேழச்சரம்
அருதியின் சுருதி அணிபெருகும்பரம்

திருவான அல்லாகு வென்றதற்சொரூபத்தைத்தொடுத்தோதுவாய்மனமே

தங்கும் அல்லா கூவை
தூங்காமல் வோதிட

தீங்கெனும்பாவம் தினந்தினம் நீங்கும்
சங்கையுடன் திரு சற்வகலையெங்கும்

மூங்குமெய்ஞானநல்வழி யென்றிதை மென்மேலும் மெச்சிடுவாய்மனமே

மருதினில் அமீது
மலருஞ் செந்தமிழை

கருதியனுதினம் கரையில் பகர்ந்திட
சுருதியின்பூமுடி சுகப்பதிப்புவியினில்

ம:ருமதியிலங்கும் மகிமைப்புகழெங்கும் மாமறைப்பொருளிதுவே (கலி)

---

சபையோரே சகலகலை என்ற வர்ணமெட்டு
இராகம் இந்துஸ்தான்காபி தாளம் ஏகம்

37. பல்லவி

சுழிமுனையறிந்து சுகம்பெருவாயே வுடல்
சூட்க்ஷியநிலையின் சுகந்தெளிவாயே (சுழி)

அநுபல்லவி

தொழில் தொல்லை மாய்கைதனைப்போக்கி
எழில்கண்டு மனக்கவலை நீக்கி

விழியில் லெழுத்தில் யிணையைத்தாக்கி வினையகற்றிய வுடல்
சூட்க்ஷியநிலையின் சுகந்தெளிவாயே (சுழி)

சரணம்

யாகூவென்றோங்கி யெழுந்திடும்வாசி
சாகுபடாமல் சாந்தத்தநேசி
லாகுஅஸிபால் கடிவாளம்பூட்டி உடல்
சூட்க்ஷியநிலையின் சுகந்தெளிவாயே (சுழி)

மூக்கோண வெளியின் மேடைதனில்சென்று
மக்குல் மூச்சுடரின் முப்பொருளைக்கண்டு
சச்கையகற்றிப்பாதம் தெரிவாயே வுடல்
சூட்க்ஷியநிலையின் சுகந்தெளிவாயே (சுழி)

சுக்கும்மலர்க்கோட்டை சூட்க்ஷியமறிய
வக்கமீரேழ் கருபுகள் சூழ்க
பக்கம்சுழிமூனைப் பசலிறவுதெழிய உடல்
சூட்க்ஷியநிலையின் சுகந்தெளிவாயே (சுழி)

அல்ஹம்துஐந்தின் அமைந்திடுமாலம்
இல்லானகனியை இசைத்திடினில் நலம்
சொல்லுந்தாசன் சாகுல்கனுகூலம் வுடல்
சூட்க்ஷியநிலையின் சுகந்தெளிவாயே (சுழி)

இசைந்த ஏறும் கரிபரிபோர்வை யென்ற வர்ணமெட்டு
இராகம் பைரவி தாளம் ஆதி

## 38. ஓரடிக் கொச்சம்.

கருவினுட் கருவதானதற் கருவை யறிவாயடிமயிலே—கல்புக்
கருத்துனுலறிந் திருத்திய தன்பொருள் தெரிவாயடிகுயிலே (1)

அருவெனும் பொருளுரு வானவடிவை யறிவாயடிமயிலே—அது
பருவத்தில்நின்று வெளியான தீபம் தெரிவாயடிகுயிலே (2)

அவ்வலகதிலில் அடங்கிநின்றதும் அதுதானடிமயிலே—அது
ஒவ்வலானவெண் முத்துனுகத்தெனரூபம் தெரிவாயடிகுயிலே(3)

வெண்மையான அம் முத்துவெடித்திருபிளப்பானதடிமயிலே—அலை
யுண்மையானநடு மத்தியிலுயர்ந்த தொருபுகையாமடிகுயிலே (4)

வுயர்ந்தஅப்புகை வோடும்வாசியெனத் தெரிவாயடி மயிலே-வுடல்
நயந்துஜீவனாய் நடித்திலங்கிய வுயிராமடி குயிலே (5)

வெடித்திருபிளப்பில்வகுத்திடுங்குணங்கள்நான்காமடிமயிலே-வசி
தடித்தசடலமாய் தளிரும்பயிர்களென தெரிவாயடிகுயிலே (6)

தளிரும்சடல் மதர்க்குயிரதான அப்புகைதானடிமயிலே—தினம்
வளரச்செய்கின்ற வன்னிஹயாத்தென தெரிவாயடிகுயிலே (7)

கூடியஜந்தையும் குதிக்கச்செய்ததோர் குன்னுமடிமயிலே—கலை
பாடிச்சங்கமாய் சேர்ந்தெழுந்தருளிய பயக்கூனுமடிகுயிலே (8)

யெழுந்தஅச்சரம் யேழின்தலங்களை அறிவாயடிமயிலே—யேக
தெளிந்தபதினான் கச்சரக்கோட்டையெனத் தெரிவாயடிகுயிலே()

சுரந்திடத்தவம் புரிந்துநற்கதி பெருவாயடிமயிலே—ஜெகத்தில்
சிறந்ததாசன் சாகுல்கவியின் பொருளறிவாயடிகுயிலே (10)

வுல்லாச மாரன் என்ற வர்ணமெட்டு

இராகம் இந்துஸ்தான் பியாக் தாளம் ஏகம்

## 39. ஓரடிப்பதம்

சச்சிதானந்தம் சிர்றையறிந் தால்பரமானந்தம்—சற்வலோக (சச்)

காட்சிமணிமேடை காவில்நின் றுலாவும்
பச்சைப்புறுவாசிப் பகர்ராசிப் பதிநேசிச்—சற்வலேக (சச்)

தாத்தின் குணவகை தவத்தில்விண்டு
சிபாத்துநிலையறிவாய் சுகந்தெழிவாய் சுகம்பெருவாய்ச்—சற்வலோக (சச்)

தன்சிகுதஸ்பீஹின் தாபரம்மகிமை
தன்சேருகுலமடுத்து தலம்வகித்துத் தவம்முடித்துச்—சற்வலோக (சச்)

நாலெந்துபுத்தை நன்றுயடைத்துக்கட்டி
மூலைப்புதரிலோட்டி மௌனமூட்டி மனம்காட்டிச்—சர்வலோக (சச்)

முப்பாழுங்கடந்து மௌனமேபூண்டு
ஜப்பாரிலமுதுண்டு சரக்குண்டுச் சுழிகண்டுச்—சற்வலோக (சச்)

செப்பும்அமீது செந்தமிழென்கீதத்தை
ஒப்பிப்பொருளுணர்ந்து வழிபகர்ந்து வுள்ளமகிழ்ந்துச்—சற்வலோக (சச்)

ரத்தின ரஞ்சுக ரசக்கோர்வை

## மூற்றிற்று

இன்ஷானல்லா

# ரத்தினப் பதிகம்

## விருத்தம்

தலையிரத்தின ரஞ்சுகரசக் கோர்வை
தருப்பெருகிட யருள் புரிகுவதும் நீயே
கவலையில் மூழ்கும் சபாக்களனைத்தும்
கார்த்தருள் புரிகுவதும் நீயே
குவளையுறவே யெனது கல்பினிலுறை
கரையிலருள் புரிகுவதும் நீயே
குவலமீதி லுன்பாதமே கெதி
கருணையா முகியித்தீனுன் னடைக்கலமே (க)

மகத்துவம் பெருக வெங்கும்
மதிபூகக் கிருபை புரிகுவதும் நீயே
தருத்தினி லிருந்த சங்கைத்
தலத்தினி லெனைக்காப்பதுவும் நீயே
அகத்தினில் வரும்வினைக ளகற்றி
அரண்பதி சேர்ப்பதுவும் நீயே
அகதாயடிமை வரமருள வேண்டினேன்
அருள்புரிவீர் முகியித்தீ னுனடைக்கலமே (உ)

கருணையொளிவு யிலங்கும்
ஹக்கனுக்குகந்த பூசவதிரு மாங்கனியே
குருவாயிருந்துசுகரை தனில்வரும்
சுசடகற்றிய நவதிரு மாங்கனியே
மருளுமாயக் கோட்டாலை யகற்றி
மதியமூர்த்தூட்டிய நவதிரு மாங்கனியே
மிருளறை திறந்துவச மருளும்
மேலோன் முகியித்தி னுனடைக்கலமே (௩)

தருணமே யுதித்தென் னினைவினில்
தாளமாய்ப்புகுந்த நவதிரு மாங்கனியே
திருமறைப் புகழினச் சீரின்
தகாதபிழை பொருத்தருளும் நவதிருமாங்கனியே
அருளானருளை அனுதினமும்
அகத்தினி லறிவித்த நவதிருமாங் கனியே
ஆருண்டு முனையன்றி யிவ்வுலகில்
அருள்புரிவீர் முகியித்தீனு னடைக்கலமே (௪)

சங்கீத முழங்கக்கவி களுந்துலங்க
சாத்தைப்புகட்டிய நவதிருமாங் கனியே
சிங்கமாப்பதி வெங்கமல மணிமேடை
சிறந்தருள்புரிவீர் நவதிருமாங் கனியே
பொங்குமா வெனுந் தேனையுண்டு
பெருகியதால நவதிருமாங் கனியே
போங்குமிழ் நீரப்பளிங்கி போற்
பச்சைவசவருளு முகியித்தீனு னடைக்கலமே (௫)

அங்கமாம் புகழ்தங்கிட வுதித்த
அருமறை நெறியுரு நவதிருமாங் கனியே
அங்கிலப்புவியி லடிமையன் கோத்திரம்
அருள்மங்கா திருக்கக்கிருபைசெய்நவதிருமாங்கனியே
வாங்குந் தெளஹீதுக் கவிமா
வாசம் பொருந்திய நவதிருமாங் கனியே
வோங்கும் பாமேவிய வள்ளலேதிரு
வாக்கருள்வீர் முகியித்தீனுன் னடைக்கலமே (௬)

மூலே மூச்சுடரமைந்த
　　முதுமறைப் பேரான நவதிருமாங் கனியே
மேலவனுதிர மண்டலாளக் கதிர்
　　மலர்வடிவாய் நின்றுலாவிய நவதிருமாங் கனியே
கோலப் புவிமீது குணமாயுதித்து
　　கெடுதுயரகற்றிடும் நவதிருமாங் கனியே
காலனை நீக்கியே கரைதனில்
　　கார்த்திடு முகியித்தீனுன் னடைக்கலமே (எ)

ஆலமேயறிய அமானச்சுய மொழி
　　அண்ணவி லுதித்தருளும் நவதிருமாங்கனியே
அலிபெனுமோ ரச்சரச்சுழி யெனும்
　　அகத்தினிலிலங்கிடும நவதிருமாங்கனியே
வாலையெனுஞ் சற்குரு பாதத்தின்
　　வடிவதனைப் பணிந்திடவே நவதிருமாங் கனியே
கோலமிட் டுலகினிலுன் கெதி
　　வேண்டினேன் முகியித்தீனுன் னடைக்கலமே (அ)

பாலாறு பெருகத் தவம்புரிந்து
　　பாரினில்பலன்பெற்றிட பதியருள்நவதிருமாங்கனியே
பூலாறுவூரிய புகழெழுங்கும்
　　புனிதனின் நாமந்துலங்கும் நவதிருமாங் கனியே
கூலாறு மின்னுலகினின்மேல்
　　குருமெய்ஞான பதிகம் நவதிருமாங் கனியே
தாலாறு வுன்னிருமா மலர்பாதம்
　　தழுவினேன் முகியித்தீனுன் னடைக்கலமே (கூ)

தூலாறுலாஹிமறை மீதுயனுதினந்
　　துதித்திடவே பதியருள்வீர் நவதிருமாங் கனியே
மூலாறு மாதேவாசை முழங்க
　　மௌனமொழிக் கருணைபுரிவீர் நவதிருமாங் கனியே
காலாறு பொன்னுலகு பொருந்தும்
　　கதிரினப் பொக்கிஸ்சமருள் நவதிருமாங்கனியே
மேலாறுபிதா யமூர் துண்டேன்
　　முகியித்தீனுன் னடைக்கலமே • (ω)

கண்ணகக் கலைகளினலைகள் சூழ்ந்த
காவினில் வாழுங்குருவே நவதிருமாங் கனியே
பண்ணகத் தளிர்கள் வோங்கும்
பூபதிச்சுழினைசோபனம் நவதிருமாங் கனியே
வண்ணகக் கமலத்தேன் கனி
வுன்றினை மொழியருள் நவதிருமாங் கனியே
விண்ணகமதி பமுர்தம் சிந்த
வேண்டினேன் முகியித்தீனுன் னடைக்கலமே (௰க)

எண்ணக முப்போருளாகி (கனியே
யெழுகருவிகளு முருகாவண்ணங்காரும் நவதிருமாங்
குண்ணகக் குகைக்கண் வீட்டில்
குமரியரம் வாலரூபிக் குஞ்சர நவதிருமாங் கனியே
தண்ணக மலைகளு மேவிடவே
தாரணியில் நல்வாக்கருளும் நவதிருமாங் கனியே
துண்ணகக் கடலில் மீழ்கவே
துதித்தேன் முகியித்தீனுன் னடைக்கலமே (௰உ)

மாறுத்திருவடித் தீபமேற்றி
மெய்த்திருக் கலிமாப்பெரும் நவதிருமாங் கனியே
மீறுமொனுமச்சரக் கலைகள்தன்ன
மாகதக் கதிதரும் நவதிருமாங் கனியே
தீறுதமனக்கவலைப் பிணியை
தீர்த்திடத்தகுந்த நவதிருமாங் கனியே
தூறுகவேவுனை நம்பினேன்
துணைபுரிவீர் முகியித்தீனுன் னடைக்கலமே. (௰௩)

ரத்தினப் பதிகம்

முற்றிற்று

பிஸ்மில்லாஹிற்றஹ்மானிற்றஹீம்

# ரத்தினக்கும்மி

## காப்பு

உன்றனதெய்வமே வுனையன்றி யிவ்வுலகில் வேறில்லை
மன்றாடி யெவ்வுயிரும் மேன்மை பெற்றிடுங்கலை—குன்றாத
நல்லறிவு யென்னாளும் நாவிலருள் தருந்தாய்யவனை
நன்றாய்வளரும் ரத்தினக்கும்மி நாதர் முகியித்தீனே துணை.

## விருத்தம்

காரணக்கடல் மூளங்கும் ஹாமில்செய்குதுமா ஞெலியைப்போற்றி
ஆரணக்கவி யுரைக்கும் அகம்மது முகியித்தீனைப் போற்றி
சீரணர் செய்யது மஸ்கூதின் சீரடியனுதினம் பணிந்துபோற்றி
பூரண ரத்தினக்கும்மிப் புகழைப் பூவுலகினி லியற்றினேனே.

## கும்மி.

1. கும்மியடி மனக் கும்மியடி மனக்
கும்மியடி மனக் கும்மியடி
கும்மியடி சுருதி
ஜெம்மற் செய்குதுமா ஞெலியைப்போற்றி
ஜெம்மில் கும்மி யடிதினமே சுருதி
ஜம்மில் கும்மியடிகுணமே (கும்)

2. அம்மலர்மாளிகை அறிந்து காவினில்
அம்பலக் கும்மியடி மனமே
அம்பலக் கும்மியடி மனமே அணை
கொம்புச்சுனை அமுதைக் கோரிக்குசலத்தில்
கம்பைக் கும்மி யடிதினமே கணை
பம்பைக் கும்மி யடிகுணமே (கும்)

3. ஆத்துமாவினில் ஐந்துடன் ஆறும்
அத்துக் கும்மியடிமனமே
அத்துக் கும்மியடிமனமே அடல்
வேத்துருக்காட்டில் வேட்டைகளாடி
வூத்துக் கும்மியடி தினமே வுடல்
கத்துக் கும்மியடி குணமே (கும்)

4. ஆங்காரமகற்றி அரூபத்தைப் போற்றி
அங்கக் கும்மி யடிமனமே
அங்கக் கும்மி யடிமனமே அரு
தாங்குந் திருச்சுழி தங்குங்குருவழி
தாங்காக் கும்மி யடிதினமே திரு
மங்காக் கும்மி யடிகுணமே (கும்)

5. ஆற்றைக்கடந்து அக்கரை புகுந்து
அருகில் கும்மி யடிமனமே
அருகில் கும்மி யடிமனமே அனு
மாற்றிப்பிடித்து மதிவாசல் திறந்து
மறுவிக் கும்மி யடிதினமே மனு
கருதிக் கும்மி யடிகுணமே (கும்)

6. ஆதியையறிந்து அகத்தில் தெளிந்து
அதிஜெயக் கும்மி யடிமனமே
அதிஜெயக் கும்மி யடிமனமே ஆலை
ஜோதியினுட் பொருள் சூட்க்ஷியச்சக்கரம்
ஜாதிக் கும்மி யடிமனமே சோலை
நீதிக் கும்மி யடிகுணமே (கும்)

7, ஆகாச அஞ்சினில் அறிவுடன் தூங்கி
அகத்தில் கும்மி யடிமனமே
அகத்தில் கும்மி யடிமனமே அங்கு
சாகாதகாலெனும் சர்ப்பத்தை ஆட்டி
ஜெகத்தில்கும்மி யடிதினமே சங்கு
பஹாவினில் கும்மி யடிகுணமே (கும்)

8. பூத்திடுங்கமலப் பருவம் அறிந்து
புத்திக்கும்மி யடிமனமே
புத்திக்கும்மி யடிமனமே பால்
காத்திகைஹேவரபுக் கார்வினில் சேர்ந்து
கத்திக்கும்மி யடிதினமே கால்
பத்திக்கும்மி யடிகுணமே (கும்)

9. பஞ்ச பூதங்களின் பேதம்வொடுங்கிட
புஞ்சக்கும்மி யடிமனமே
புஞ்சக்கும்மி யடிமனமே பாவை
அஞ்சித்திருவடி அரண்பதி நாடியே
அஞ்சொகுத்துந் தொழுவாய்தினமே அலை
தஞ்சப்புகுதுவாய் குணமே (கும்)

10. பத்தினிமிலொன்பது பகைவினையகற்றி
பாத்திக்கும்மி யடிமனமே
பாத்திக்கும்மி யடிமனமே புதன்
நத்தித்தெளிந்து நடுநிலையறிந்து
நித்தக்கும்மி யடிதினமே வுடல்
முத்தக்கும்மி யடிகுணமே (கும்)

11. பருவமறிந்து பரவெளிக்குள் புக்கி
பூர்வக் குணமறிவாய் மனமே
பூர்வக் குணமறிவாய்மனமே பதிப்
புருவமத்தியில் புகளும் ஒளிவின்
பெருக்கமறிகுவாய்தினமே புதி
அரூபம்வணங்குவாய்குணமே (கும்)

12. பள்ளத்தினுள்ளறைப் பொருளை அடுத்து
புள்ளிப்பாஷையறிவாய்மனமே
புள்ளிப்பாஷையறிவாய்மனமே பாலம்
தெள்ளிய பனையேறி தினஞ்சிந்துந் தோட்டத்தில்
அள்ளியருந்துவாய் தினமே ஆலம்
துள்ளிவிளை யாடுவாய்குணமே (கும்)

13 பக்குவமறிந்து பாதையைநோக்கி
பொக்கிஷ மறிகுவாய்மனமே
பொக்கிஷமறிகுவாய்மனமே பொழி
வக்குள் கோபுகாபலே வுச்சியைக்கண்டு
ஹக்கைவணங்கு வாய்தினமே குழிச்
செக்கை யோட்டு வாய்குணமே (கும்மி)

14. பாதுகார்க்கும்புலவர் பாடுஞ் செந்தமிழின்
புதுவல்கும்மி யடிமனமே
புதுவல்கும்மி யடிமனமே புள்ளி
வாதுசெப்பிடாமல் வித்தரசர்ப்புகழ்
வோதுங்கும்மிய டிதினமே வெள்ளி
சாதுக்கும்மியடிகுணமே (கும்)

15. தங்கக்கற்றிநீ தலத்தில் தெழிந்து
துங்கக்கும்மி யடிமனமே
துங்கக்கும்மி யடிமனமே தடல்
பொங்குமமூர்தத்தை பருகியடாண்டத்தில்
பாங்கிக்கும்மி யடிதினமே பாடல்
வாங்கிக்கும்மி யடிகுணமே (கும்)

16. திருவதிர்சேர்த்து திசைவழிபார்த்து
தருகிக்கும்மி யடிமனமே
தருகிக்கும்மி யடிமனமே தவ
சுரூபமேங்கிச் சறுகிடாமல் நீ
சருவக்கும்மி யடிதினமே ஜீவ
தர்மக்கும்மி யடிகுணமே (கும)

17. தேர்வடக்கயிற்றை திரையினில்கட்டித்
திருக்கமலத்தில்கும்மி யடிமனமே
திருக்கமலத்தில்கும்மி யடிமனமே தலை
நேர்கீழ்திசையிலேரி நால்ரண்டிலணுகி
நற்விதிவைப்போற்றுவாய்தினமே நிலை
அருணலைத்தெளிகுமாய் குணமே (கும்)

18. தொல்லைக் கடல்வினை தனையகற்றிஞானந்
தில்லைக்கும்மி யடிமனமே
தில்லைக்கும்மி யடிமனமே திரு
எல்லைகண்டுமேனம் மகிழ்ந்து யெமனை
வெல்லக்கும்மி யடிதினமே வருச்
செல்வக்கும்மி யடிகுணமே (கும்)

19. ரத்தினாஞ்சுக ரகசியக்கும்மியின்
ராத்திப்பழகுவாய் மனமே
ராத்திப்பழகுவாய் மனமே
முத்திதருஞ்சுழி முதல்கலையிராரை
மாத்திக்கும்மி யடிதினமே மௌனத்
தோத்திரக்கும்மி யடிகுணமே (கும்)

20. தன்னுக்குளிருந்த தலைவனையறிந்து
துன்னக்கும்மி யடிமனமே
துன்னக்கும்மி யடிமனமே தங்கும்
வன்னக்கலைகள் வளரும் நாலாமறை
வண்ணக்கும்மி யடிதினமே வோங்கும்
துன்னக்கும்மி யடிகுணமே (கும்)

21. மூத்துடன்கூட்கூடி மூலப்பொருள்தன்னை
முத்தியேகும்மி யடிமனமே
முத்தியேகும்மி யடிமனமே மலை
வித்துடனாறு கோணம் வாகைதுலங்கிட
வொத்துக்கும்மி யடிதினமே வாலை
சித்துக்கும்மி யடிகுணமே (கும்)

22. முத்திஉதித்திடும் முப்பொருளின்சுழி
மத்தியில்கும்மி யடிமனமே
மத்தியில்கும்மி யடிமனமே மறை
சித்திபெற்றிடவே ஜெகத்திலெக்காலமும்
சாத்துக்கும்மி யடிதினமே சிறை
மாத்துக்கும்மி யடிகுணமே (கும்)

23. மெய்ஞானநற்பதி மேடைபெருகிய
மையல்க்கும்மி யடிமனமே
மையல்க்கும்மி யடிமனமே மதி
அய்யின்பொய்கை நாட்டு ஆஸ்கவி டேடஸ்கீதத்தை
ஆராய்ந்துகும்மி யடிதினமே ஆதி
பாய்ந்துகும்மி யடிகுணமே (கும்)

24. மூலமுக்கோண மேடைதனில் சென்று
மாலை ஐந்தச்சாமறிமனமே
மாலை ஐந்தச்சாமறிமனமே மனக்
காலைக்கதிர்க் கவர்முச்சுடரே சிறு
வாலைவருகுமேதினமே வனப்
பாலைப்பருகுவாய் குணமே (கும்)

25. மச்சுக்குளிருந்து மெச்சும்புருவோசை
மோச்சமறிகுவாய் மனமே
மோச்சமறிகுவாய் மனமே மல்லி
வுச்சமூலகுசாதன் வுட்பொருளுணர்ந்து
வூச்சிதக்கும்மி யடிதினமே வல்லி
காக்ஷிக்கும்மி யடிகுணமே (கு)

26. மூலைக்குகையினில் பேழியைப்பூட்டி
மாலைநிலத்தை யுழுகுவாய்மனமே
மாலைநிலத்தை யுழுகுவாய்மனமே மேலக்
காலைப்பயிர்தனைக் கமலத்திலேற்றி
கலைஅடுத்துக்கும்மி யடிதினமே கோல
மெடுத்துக்கும்மி யடிகுணமே (கு)

27. கருவினிலொடுங்கி கவருங்கருவின்
கருத்துணர்ந்திடுவாய் மனமே
கருத்துணர்ந்திடுவாய் மனமே கலை
அருவினிலூரும் ஆனந்த வெள்ளத்தின்
அருளைச்செப்பிடு வாய்தினமே அலை
பொருளை ஒப்பிடுவாய்குணமே (கு)

28. கொல்லுலைபோல் கொதிக்கும் வுந்திப்பீடப்
குல்குனில்கும்மி யடிமனமே
குல்குனில்கும்மி யடிமனமே கோடை
முல்லைமலர்பூக்கும் மெல்லையில்தங்கி
மூலக்கும்மி யடிதினமே மேடை
மேலக்கும்மி யடிகுணமே (கு)

29 கட்டிதனையிட்டு கமலசிங்காசனே
கூட்டித்தழுவிடு வாய்மனமே
கூட்டித்தழுவிடு வாய்மனமே கால்க்
கெட்டிடனுலாகக் கோட்டைப்பதியின்மேல்
கொட்டிக்கும்மி யடிதினமே கோல்
நாட்டிக்கும்மி யடிகுணமே (கு)

30. சென்னுகவீதி சிர்துலங்கும்வொளி
சன்னதியில் கும்மியடி மனமே
சன்னதியில் கும்மியடி மனமே சாம்
அன்னையறிந்திட ஆரிரண்டிலனுகி
அன்னக் கும்மி யடிதினமே அறம்
துன்னக் கும்மி யடிகுணமே (கு)

31. சுழிமுனையறிந்து சுகாதீதம்பூண்டு
சோழியில் கும்மியடி மனமே
சோழியில் கும்மியடி மனமே சீன்
தெழிமனச் சூட்சுமிய தோழியைக்கண்டு
தொழிலில் கும்மியடி தினமே தீன்
தளிரக் கும்மி யடிகுணமே (கு)

32, சூலென்னுங்கோட்டை சூஸ்த்திரமறிந்து
சாலென்னுங் கும்மி யடிமனமே
சாலென்னுங் கும்மி யடிமனமே தாழை
தூலென்னு மூந்தக்கா திருவடிக்கூட்டின்
தாலென்னும் பூட்டை யமை தினமே தழை
காலென்னும் வீட்டைத்திற குணமே (கு)

33. சச்சிதானந்த சர்லலோகக்குரு
சாக்ஷேம கும்மி யடிமனமே
சாக்ஷேம கும்மி யடிமனமே
வச்சிவப்பொருளின் வல்லோன் திருவழி
உச்சியில் கும்மி யடிதினமே
காக்ஷிக் கும்மி யடிகுணமே (கு)

34. இணைந்த அச்சரம் ஈரேழுதலங்களின்
இணையறிகுவாய் மனமே
இணையறிகுவாய் மனமே இசை
அணைபதினன்கு அச்சரக்கோட்டைக்குள்
அன்னக்கும்மி யடிதினமே ஆசை
துன்னக்கும்மி யடிகுணமே (கு)

35. இயம்பிடும் ஐயின்ரண்டில் இட்டுயிலகற்றி
இயற்கையறிகுவாய் மனமே
இயற்கையறிகுவாய் மனமே ஈசன்
காயம் அமுர்தஞ்சிந்துங் கமலத்தில்
மேறயில் யிலகறிவாய் தினமே கேசன்
மையல் பெருகுமாங் குணமே (கு)

36. வட்டிலடங்காது யேகுஞ்சுபுகானி
எட்டிய கும்மி யடிமனமே
எட்டிய கும்மி யடிமனமே எனை
மாட்டி யெடுத்திடும் மாமறை ரஞ்சுகம்
மீட்டிக் கும்மியடி தினமே வினை
யோட்டிக் கும்மி யடிகுணமே (கு)

37. எட்டாத்திருமூலை யேகியமாளிகை
எட்டு மரக்காதிரு மனமே
எட்டு மரக்காதிரு மனமே வணி
வட்டத்திலேரும் வாசியைப்பூட்டி
வீட்டைத்தழுகுவாய் தினமே வூணிக்
கோட்டை நாடுவாய் குணமே (கு)

38. விசித்திரக்கரு வூர்ப்பட்டணமேகி
வசித்துக் கும்மி யடிமனமே
வசித்துக் கும்மி யடிமனமே வழி
நசிகத் துறைக்கும் நம்செய்குதுமாஞெலி
தேசிகரைத் துதிப்பாய் தினமே தோழி
வாசிப்பதி யேறுவாய் குணமே (கு)

39. உள்ந்தி லொளிவாய் வுதித்திடுஞ்ஜோதியின்
வள்ளக் கும்மியடி மனமே
வள்ளக் கும்மியடி மனமே வலை
வேளைவர் துணைகொண்டு வாசிக்குதிரையேறி
விள்ளக் கும்மியடி தினமே வுலை
கிள்ளக் கும்மியடி குணமே (கு)

40. வசியமாலையிட்டு வன்னிமல ரெட்டில்
வசித்துக் கும்மியடிமனமே
வசித்துக் கும்மியடிமனமே வுடு
ஆசிறியன் சாகுல் அமீது செம்பொற்பதம்
விசித்திரக் கும்மியடி தினமே வீடு
மூசியக் கும்மியடி குணமே (கு)

அய்யாபழனிமலை வேலா என்ற வர்ணமெட்டு
இராகம் சஹானு தாளம் ஏகம்

## ஓரடி வரிசை.

ஆதிபரா பரமே ஜெயமங்களம்—அன்னை
நீதிபிதாகுருவே ஜெயமங்களம்
ஜோதிக் கலிமறையே ஜெயமங்களம்—சுக
ஜாதி அல்லித்துறையே ஜெயமங்களம் (ஆ)

வண்ணத்திருவடிவே ஜெயமங்களம்—வளரும்
கண்யம் முகியித்தீனே ஜெயமங்களம்
பண்சீர்கா சிமுக்கும் ஜெயமங்களம்—பூவில்
அன்னைப்பத மோதுவர்க்கும் ஜெயமங்களம் (ஆ)

வித்வப்புலவர்களே ஜெயமங்களம்—வாழ்த்தும்
முத்துரத்தினங்களே ஜெயமங்களம்
பக்த்திக் கனவான்களே ஜெயமங்களம்—பால்
நத்தும் பெரியோர்களே ஜெயமங்களம் (ஆ)

நற்றமிழ் கற்பித்தவர்க்கும் ஜெயமங்களம்—நாதன்
முற்றமிழை கற்றவர்க்கும் ஜெயமங்ளம்
வுற்ற அமீர்தாசன்கீத ஜெயமங்களம்—வுள்ளம்
பற்றி வாசிப்பவர்க்கும் ஜெயமங்களம் (ஆ)

176449
600 008.

## வாழி விருத்தம்

காரணுக்கிரகக் கருணைவள்ளல்
காசீமாமுகம்மது யிபுறுஹீம்சாகிபும் வாழ்க
நோனுக்கிரகப் பால்பெருகுங்கண்
நோக்கிய குருசெய்குதுமா ஞெவியும்வாழ்க
பாரனுக்கிர ரத்தினரஞ்சுக ரசம்
பகர்ந்தமெய்யோன் அமீதும் வாழ்க
சிரனுக்கிரக முத்தமிழ் க்ஷேத்திரம்
அகம்மது முகியித்தீனும் வாழ்க வாழ்க.

## ரத்தினக் கும்மி முற்றிற்று,